Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 | கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், ... என் சத்தத்திற்குச் செவிகொடும் சங்.141:1 | ஜனவரி 2019 No.1

நீங்கள் எழுப்புதலை அனுபவிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் கூடும்

You can experience and share revival

Wesley L. Duewel (1916-2016)

தேவன் காலாகாலங்களில் எழுப்புதல்களை ஏற்படுத்தி மக்களில் புதுவாழ்வையும், வல்லமையையும் அளித்துள்ளார். மேலும் ஆவிக்குரிய சந்தோஷம், ஆசீர்வாதம், நறுமணம் கனிதரும் வாழ்வு ஆகியவற்றையும் பெற்றுள்ளோம். இதை நாம் எழுப்புதல் என்கிறோம். இந்த விசேஷித்த ஆசீர்வாதம் எப்போதும் கிடைப்பதில்லை. சில சபைகள் இந்த அனுபவத்தைப் பெற்றதேயில்லை. இந்த அனுபவத்தைப் பெற்றவர்களும் சில காலங்களில் வறட்சியோடிருப்பதுண்டு. அனைத்து கிறிஸ்தவர்களும் தேவனுடைய தொடுதலைப் புதிது புதிதாகப் பெறுவது அவசியம். இந்தப் புதுப்பிக்கும் அனுபவம் கர்த்தரிடமிருந்து வருகிறது.

அதிகமான ஆவிக்குரிய வாழ்வு வாழ்கிறவர்கள், அல்லது பணி செய்கிற வர்கள் அடிக்கடி தேவனுடைய சந்திப்பைப் பெற வேண்டுவது அவ சியம். ஏதோ வாழ்ந்து கொண்டிருப்ப தல்ல, பரிபூரண வாழ்வு வேண்டும். பாரம்பரிய ஊழியமல்ல வல்லமையுள்ள ஊழியம் வேண்டும். அந்தஸ்திற்காக அல்ல, தூய ஆவியானவரைப் பெறும் அபிஷேகத்தின் சந்தோஷம் வேண்டும்.

தனிப்பட்ட எழுப்புதலுக்காக ஜெபிப்பது எப்போது?

எப்போது உங்கள் இருதயம் ஆவிக்குரிய எழுப்புதலை நாடுகிறது? அதை ஜெபத்தோடு அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்?

- ஆவிக்குரிய கவலையீனம், தொடர்ந்த ஆவிக்குரிய வேத வசன பசியின்மை, ஜெபக்குறைவு, சபை ஐக்கியக் குறைவு இவை நம்மில் காணப்படும் போது.
- தேவ வசனத்தின் ஆசீர்வாதத்தை நீங்கள் பெறாமலும் அதை அடிக்கடி வாசிக்க வேண்டுமென்ற ஆசை குறைந்து போகும்போதும் மற்றும் தேவவசனம் வாசிக்கப்படும்போது உண்மையாகவே தேவன் பேசுகிறார் என்ற எண்ணம் இல்லாத போதும்
- ஆழமான தாழ்மை, ஆவியினால் பிறந்த கிருபைகள் மற்றும் அன்பின் பொறுமை ஆகியவை குறைந்து போன உணர்வு ஏற்படும்போது
- பாடுகளிலும் தேவைகளிலுமிருக்கும் மக்கள் மீது பரிதாபமின்மை, கிறிஸ்து வற்ற மக்கள் மீதான வாஞ்சையின்மை, சொந்த வாழ்விலும் சபை வாழ்விலும் தேவ பிரசன்னம், ஆசீர்வாதம், பொறுப்பு ஆகிய உணர்வுகள் கரிசனை யற்றுப் போகும்போதும்
- ஜெபம் சந்தோஷமாக அல்ல, கடமையாக மாறி ஜெபிக்க வேண்டிய வர்களுக்காக ஜெபிக்காமலும், ஜெபிக்கும்போது தேவபிரசன்னத்தை உணராமலுமிருக்கும்போது

குழு எழுப்புதலுக்காக எப்போது ஜெபிப்பது?

- உங்கள் குழு ஜெபம் உயிரற்ற தாகவும் அங்கத்தினர் ஜெபத்தில் உற்சாக மற்ற வர்களாகவும் அரைகுறை மனதோடு ஸ்தோத்திரங்கள் ஏறெடுக்கப்படும்போது
- குழு தொழுகைகளில் தேவனு டைய பிரசன்னம் இருப்பதாகவும் அவர் நேரடியாகப் பேசுவதாகவும் உணரப் படாமல் பொங்கி வழியும் சந்தோஷ மும், நன்றி செலுத்துதலும் இல்லாம லிருக்கும்போது
- பாவத்தைப் பற்றிய பய உணர்வும், சன்மார்க்க நெறியின் தேவையும் இல்லாமற்போய் மக்களை கிறிஸ்து வுக்கு நேராக வழி நடத்தாமலிருக்கும் போது
- மக்கள் தேவ ஆவியால் நடத்தப் படாமலும் சாட்சியற்று உதவி செய்ய மனமற்றுமிருக்கும்போதும் தேவனு டைய காரியங்கள் உதாசீனம் பண்ணப்பட்டு, தேவன் விரும்பும் காரி யங்களைச் செய்யப் பார்வையற்றி ருக்கும்போது
- ஒருவருக்கொருவர் இணைப்பில்லா மல் கட்சி உணர்வோடும் மன்னி யாய்மையோடுமிருக்கும் போது

உங்கள் ஜெபம் எழுப்புதலுக்கு வழியை உண்டாக்கும்

1. உங்கள் பசியை ஆழப்படுத்த தூய ஆவியானவரைக் கேளுங்கள்

தேவனுடைய புதிதாக்கும் பிரசன்னத்திற்காகவும் வல்லமைக்காகவும் வாஞ்சிக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மக்களின் இருதயத்தில் எழுப்புதலுக்கான தேவனுடைய ஆயத் தம் ஆரம்பமாகிறது. தேவன் மக்களை ஆசீர்வதிக்கத் திட்டமிடும் போது அவர் சபையை ஜெபிக்கும்படி அழைக்கிறார். தேவன் கிரியை செய்யும்படி நீங்கள் விரும்பினால் அந்த விருப்பம் தூய ஆவி யானவரிடமிருந்து வருகிறது. தெய்வீகப் பணியின் ஆவல் உங்களில் ஆழமாக்கப் பட உங்கள் வாழ்விலும், சபை வாழ் விலும் எங்கு நீங்கள் ஜெபிக்கிறீர்களோ அங்கெல்லாம் ஜெபத்திற்கு முக்கியத் துவம் அளியுங்கள்.

2. உங்களுக்கு ஜெபபாரம் ஏற்பட ஜெபியுங்கள்

தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற தேவனால் நமக்கு அளிக்கப் பட்ட வரம் ஜெப பாரம். மன்றாட்டு வீரர்களுக்கு விசேஷித்த ஆவிக்குரிய பொறுப்பை அளிப்பதில் தேவன் விருப்பமுடையவராயிருக்கிறார்.

பிரிட்டனிலுள்ள ஒரு சிறந்த தேவபக்தன் சில காலங்களுக்கு முன்பாக ஒரு மறைவான ஜெபவீரராயிருந்தார். சீனாவில் பணி செய்து கொண்டிருந்த ஒரு மிஷனெறி இயக்கத்திற்காக அவர் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந் தார். அவர் மரித்த பின்பு அவரது குறிப்புப் புத்தகத்தில் 20-க்கும் அதிக மான மிஷன் நிலையங்களையும் அவை களுக்காக விசுவாசத்துடன் ஜெபிக்க தேவனால் ஏவப்பட்டதையும் எழுதி யிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆராய்ச்சியின் போது இந்த இடங்களி லெல்லாம் சில வருடங்களுக்குள்ளாக ஆவிக்குரிய எழுப்புதல் ஏற்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது மரணம் வரை இந்த ஜெப வீரரைக் குறித்து அறியாவிட்டாலும் தேவன் அறிந்திருந் தார். இத்தகைய ஜெப வீரர்களுக்கான விசேஷித்த பரிசுகள் பரலோகம் காண்பிக்கும்.

3. சில வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினால் நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ள தேவன் தரும்படியாக கேளுங்கள்

தேவனுடைய வாக்குத்தத்தங் கள் உண்மையானவை. அவர் அவற்றை நிறைவேற்றுகிறவர். எனவே சில வாக்கு களை உங்கள் உள்ளத்தில் அழுத்தி அவற்றை விசுவாசத்துடன் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொள்ள தேவனிடம் கேளுங்கள்.வாக்குத்தத்தங்களில் முக்கிய மானது 2 நாளா.7:14.

(3-ம் பக்கம் பார்க்க)

பெப்ரவரி மாத உபவாச ஜெபம்

Heart cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : ***16.02.2019***
3-வது சனிக்கிழமை

சமயம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

இடம் : **El-Shaddai Church, WZ 62G, Possangipur, Janakpuri N.Delhi - 110 058.**

தொடர்பு : **Pr. S. Samraj**
மொபைல் : 98710 76999

குறிப்பு: கர்த்தருக்குச் சித்தமானால் 17.02.2019 ஞாயிறு நாங்கள் 5 ஊழியர்கள் டெல்கியில் தங்கியிருப்போம். தேவையானவர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, **mail:**Varukayinthoothan@hotmail.com
வங்கி கணக்கு : VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

இம்மாத சொன்னான சிந்தனை

வருத்தமாகிய ஆலையிலிருந்து வாழ்க்கையில் இனிய ரசம் உண்டாகிறது. கண்ணீர் வடியாத கண்களால் பிரகாசமளிக்க முடியாது.

வாக்குத்தத்தம்

"நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை"
யோவேல் 2:26

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2019 ஜனவரி மாத வருகையின் தூதன் பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். வாசகர் அனைவருக்கும் எங்கள் அன்பான **புத்தாண்டு 2019 வாழ்த்துக்கள்!**

புதிய ஆண்டுக்கான ஒரு வாக்குத்தத்த வசனத்தைக் கீழே அச்சிடுகிறேன்:

இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே;
உபாகமம் 33:29

இந்த மாதத்திற்கு ஒரு வாக்குத்தத்த வசனமும், இந்த ஆண்டுக்கு ஒரு வாக்குத்தத்த வசனமும் உங்கள் முன்னால் வைத்துள்ளேன்; அதனால் இந்த வருடம் முழுவதும் எல்லாம் செழிப்பாய், க்ஷேமமாய் இருக்கும் என்று தயவுசெய்து எண்ணாதீர்! "அதற்கு இயேசு பிரதியுத்தரமாக : என்னிமித்த மாகவும், சுவிசேஷத்தினிமித்தமாவது..... விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, **துன்பங்களோடே கூட** *நூறத்தனையாக, ... மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" மாற்கு 10:29, 30.*

காரணம் என்ன? "..... துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" 1 பேதுரு 1:6.

இந்த ஆசிரியர் கடிதத்தை எழுதுகிற என்னைக் குறித்து நானே கொடுக்கிற சாட்சி : ".....நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனுஷர்தானே;" அப்.14:15.

கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, ... ஜனங்களெல்லாரும் ..... கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்களே (1 இராஜாக்கள் 18:39) அதற்கு காரணமான "எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனா யிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை.

மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" அல்லேலூயா யாக்.5:17,18.

எலியா செய்த எல்லாவற்றையும்,.... ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான்.

அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச் சொன்னாள்.

அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க.... அவன் வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய், ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, **தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்;** *நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி,*

ஒரு சூரைச் செடியின் கீழ் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான் 1 இராஜாக்கள் 19:1-18 வரை படியுங்கள்.

அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் (இயேசுவானவர்) படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள்.

அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.

கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலை யில்லையா என்றார்கள்.

அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து : இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று மாற்கு 4:36-39.

தேவ மகிமை

தேவனுக்கு மகிமையாக, வருகையின் தூதன் அலுவலகத்திற்கென்று கட்டடம் ஒன்றைக் கட்டும்படியான மாதிரியை தேவன் எனக்குத் தந்தார். 1994-ம் ஆண்டு அதனைக் கட்டி, தேவனுக்கு மகிமையாக பிரதிஷ்டைப் பண்ணினோம். சுமார் 25 ஆண்டுகள் அதனை பராமரிக்க இயலாமற் போயிற்று.

தேவ கிருபையால் தேவனுடைய ஊழியர் ஒருவரின் ஒத்தாசையினால் கட்டட பராமரிப்பு வேலை நடந்து கொண்டிருக்கிறது, தயவாய் ஜெபியுங்கள்.

தேவனுடைய வீடு

கர்த்தருடைய சித்தப்படியே 1998-ம் ஆண்டு **"தேவனுடைய வீடு"** *என்ற பகுதியை ஜெபத்தோடு கட்ட ஆரம்பித்தோம். அங்கே அவன் (யாக்கோபு) ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது; அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.*

யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான்.

அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமா யிருக்கிறது? இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல; இது வானத்தின் வாசல் என்றான் ஆதி.28:12-17.

தேவனுடைய வீடு வேலைகள் முடிவடையவும் தயவாய் ஜெபியுங்கள்.

வங்கி விபரம் : *வருகையின் தூதன் பத்திரிகை பணிக்காக பொதுவான ஒரு வங்கி கணக்கு நீண்ட காலமாக இந்தியன் வங்கியில் உள்ளது. கட்டட வேலைக்காகவோ, உபவாச ஜெபத்திற்காகவோ நீங்கள் பொதுவான வங்கி கணக்கில் அனுப்புவீர்களானால், அந்தந்த மாத பத்திரிகை வெளியிடுவ தற்கான செலவினங்களோடு செலவாகிவிடும்.*

எனவேதான் ஜெபத்தோடு தூதன் ஊழிய முன்னேற்ற பணிக்காக தனி வங்கி கணக்கும், உபவாச ஜெபத்திற்காக தனி வங்கி கணக்கும் ஆரம்பித்திருக்கிறோம். இவைகள் எனது தனிப்பட்ட (Personal) *வங்கி கணக்கல்ல, ஊழியத்திற்கானது.*

காசோலை அனுப்புவோர் கவனிக்க: *"வருகையின் தூதன்" அல்லது "வெஸ்லி தேவதாசன்" என்ற ஏதாவது ஒரு பெயரை மாத்திரம் தயவாய் எழுதுங்கள். காசோலையில் அடித்தல், திருத்தம் செய்யாதீர்கள். புதிய வங்கி கொள்கையின்படி நீங்கள் ஒரு திருத்தம் செய்து, உங்கள் கையெழுத்தைப் போட்டாலும்*

(6-ம் பக்கம் பார்க்க)

உபவாச ஜெபம்
WESLEY DEVADASON
A/c. No.: 370601000002557
I.O.B., Court Road,
Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி
WESLEY DEVADASON
A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road,
Nagercoil-1
IFSC Code : SYNB0006182

(1-ம் பக்க தொடர்ச்சி)

4. தேவனுக்கு நேராக உங்கள் இருதயங்களைத் தாழ்த்துங்கள்

தேவனிடம் எழுப்புதலுக்காக மன்றாட நாம் தகுதியற்றவர்கள். ஆனால் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்துகிறவர்களுக்கு கிருபையையும் எழுப்புதலையும் தருவது நிச்சயம்.

5. ஒரு ஜெப பங்காளரோடு இணைத்து ஒருமனதோடு ஜெபிக்க தேவன் நடத்தும்படி கேளுங்கள்

உங்கள் கரிசனை அதிகரிக்கும் போது உங்களைப் போல பாரம் கொண்டவர்களோடு தேவன் உங்களை இணைப்பார். ஒருமனதோடு ஜெபிக்கும் போது மத்.18:19-ன் படி தேவன் துரிதமாய் பலனளிப்பார்.

தேவன் ஜெபத்திற்குப் பதிலளித்து எழுப்புதலை அனுப்புவது குறித்து உலகம் நன்கு அறியவில்லை. எனது நெருங்கிய நண்பரும், ஸ்காட்லாந்து சபையின் ஊழியரும், விசுவாச ஊழிய பயிற்சி இல்லத்தின் முன்னாள் முதல்வருமான டங்கன் அற்புதமான 'லூயிஸ் விழிப்புணர்வு' பற்றி கூறிய விவரங்களைப் படிக்கலாம்.

பர்வாஸ் கிராமத்திலுள்ள இரு வயோதிப பெண்கள் இணைந்து இரவு எழுப்புதலுக்காக ஜெபிக்கத் தீர்மானித்தனர். அவ்வாறு ஜெபித்து வர சில மாதங்களில் சில தேவ பயமுள்ள வாலிபர்கள் கிராமத்தின் இன்னொரு பகுதியில் ஜெபிக்க ஆரம்பித்தனர்.

இப்பெண்கள் ஜெபித்தபோது பிரசித்தி பெற்ற டங்கன் பர்வாஸ் வந்து அவர்களை வழிநடத்துவதாக தேவன் வெளிப்படுத்தினார். அவருக்குக் கடிதம் எழுதியபோது நெருக்கடியான பணிகள் இருப்பதால் அழைப்பை ஏற்கமுடியாது என வருத்தம் தெரிவித்தார். 'நீங்கள் வரமுடியாது என்று சொன்னாலும் தேவன் நீங்கள் வருவதாகக் கூறி விட்டார்' என அவர்கள் பதிலளித்தனர்.

1949 டிசம்பர் மாதம் டங்கன் ஹெப்ரைட்ஸ் தீவில் தொடர் கூட்டங்களை நடத்தினார். பல இரவுகளுக்குப் பின் தேவனது அதிசயமான பிரசன்னம் கிராமத்தில் காணப்பட்டு மக்கள் பாவ உணர்வடைந்தனர். அங்கிருந்து கிராமம் கிராமமாக எழுப்புதல் பரவியது. 1943 முதல் 1953 வரை தொடர் எழுப்புதல் அலைகளால் முழு சமுதாயத்தினரும் மறுரூபமடைந்தனர்.

தூய ஆவியால் பாவ உணர் வடைந்த அனேக மக்கள் தங்கள் வீடுகளிலேயே முகங்குப்புற விழுந்து வல்லமையாக மனந்திரும்பினர். ஒருநாள் இரவில் மக்கள் கூடி போலிஸ் நிலையத் திற்கருகில் ஜெபித்தனர். இதனைக் கண்ட அதிகாரிகள் மந்திரிக்கு செய்தி அனுப்பினர்.

மதுபான கூடங்கள் அடைக்கப் பட்டன. ஜெப கூடுகைகளுக்கு தீவின் பல பகுதிகளிலிலுமிருந்து மக்கள் பேருந்துகளில் வந்தனர். ஆராதனைகள் காலை 3 அல்லது 4 மணி வரை நடை பெற்றன. ஞாயிறு ஆராதனைகளில் மக்கள் கூட்டம் பெருகியது. ஜெபக் கூடுகைகள் கிராம வாழ்க்கையின் மையமாக மாறியது. எழுப்புதல் தேவனால் அனுப்பப்பட்ட தாயினும் தேவனால் நடத்தப்பட்ட இரண்டு பெண்களின் இணைந்த ஜெபம் எழுப்பு தலுக்குக் காரணமாயிருந்தது.

6. எழுப்புதலுக்கான விசேஷித்த ஜெபக் கூடுகைகளில் பிறரும் கலந்துகொள்ள அழையுங்கள்:–

அருகிலிருப்பவர்களை அழைப் பதோடு தூரத்திலுள்ளவர்களையும் கடிதம் மூலம் அழைக்கலாம். OMS ஸ்தாபனம் பணி செய்த பீக்கிங், சைனா போன்ற இடங்களில் மிஷனெறிகள் ஆறு வாரங்கள் உபவாசித்து ஜெபித்த பின் எழுப்புதல் ஏற்பட்டது. பீக்கிங்கி லுள்ள சபைகளுக்கும் பின்பு கிராம சபைகளுக்கும் எழுப்புதல் பரவியது.

அமெரிக்காவில் நடைபெற்ற மிகப்பெரிய எழுப்புதல் (1857-58) 'இணைந்து ஜெபித்த கூடுகையின் எழுப்புதல்' என அழைக்கப்பட்டது. செப்டம்பர் 23, 1857-ல் நியூயார்க் நகரிலுள்ள ஒரு சபையின் அங்கத்தினர் வேறு சிலரை அழைத்து ஜெபிக்க ஆரம்பித்தபோது ஏற்பட்டது. அடுத்த பட்டணங்களில் செய்தி எட்டிய போது அங்கும் ஜெபக் குழுக்கள் ஆரம்பமாயின.

ஆறு மாதங்களுக்குப் பின்னால் 10,000 வியாபாரிகள் நியூயார்க் பட்டணத்தில் அனுதினமும் பகல் வேளையில் கூடி ஜெபித்தனர். மேய் மாதம் எண்ணிக்கை 15,000 ஆக மாறியது. ஜெபக் கூடுகைகள் புதிய இங்கிலாந்து, ஓஹியோ, டெக்ஸாஸ், மேற்கு கடற்கரை வரையிலும் பரவியது. ஐக்ய மாகாணத்தின் பெரும் பகுதியும், கனடாவும் இதனால் தாக்கமடைந்தன.

ஒரே வாரத்தில் மெதடிஸ்ட் சபையில் 8000 பேர் மனந்திரும்பினர். பாப்திஸ்து சபையினர் 3 வாரத்தில் 7000 பேர் மனந்திரும்பினர். அமெரிக்க சபை களில் வாரம் சுமார் 10000 பேர் இரண்டு வருடங்கள் மனந்திரும்பிக் கொண்டே இருந்தனர்.ஐக்கிய நாடுகளின் அன்றைய கணக்கெடுப்பின்படி 30 மில்லியன் மக்கள் காணப்பட்டனர். அவர்களில் ஒரு மில்லியனுக்கு அதிகமானோர் இரண்டு ஆண்டுகளில் மனந்திரும்பினர்.

7. ஜெபத்தில் தொடர் களைப்பு வேண்டாம்:–

முழுமையான பதில் கிடைக்க பல மாதங்களோ, வருடங்களோ ஆகலாம். நீங்கள் ஜெபத்தில் விடாப்பிடி யாயிருந்தால் நிச்சயம் எழுப்புதல் ஏற்படும்.

தேவன் எழுப்புதலில் செயல் படும்போது நாம் நமது விருப்பத்தின்படி செயல்பட முடியாது. ஆனால் அவர் மனிதரை பயன்படுத்துவது நிச்சயம். தேவனே மக்களில் பாவ உணர்வை ஏற்படுத்தி மனந்திரும்பச் செய்வார். அவர் தமது சித்தத்தின்படி மக்களை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிரப்பு கிறார். நீங்கள் எழுப்புதலுக்கு ஒரு கால் வாயாக பயன் படுவீர்களா? அவர் சொல்லுவதன்படி நாம் செய்தால் ஆசீர்வாதம் பெறுவோம்.

பரலோக அக்கினி

Fire from heaven

Del Fehsenfeld. Jr.

அன்று களைப்பான ஒருநாள். வறண்டுபோன பூமியின் மீது சூரியன் தன் வெப்பம் நிறைந்த கதிர்களை வீசியது. மேகமற்ற வானத்தின் கீழ் திரள் கூட்டம் பார்வையாளர்கள். பாகாலுக் கும் யெகோவாவுக்குமிடையிலான பந்தயம். பாகாலுக்காக போராட 950 பேர்; ஆனால் யெகோவாவுக்காக ஒரே ஒருவர் மட்டும்.

பாகாலின் தீர்க்கர்கள் ஒவ்வொரு விதமான முறையில் முயற்சி செய்து அக்கினி வானத்திலிருந்து இறங்கிவரப் பண்ண முயற்சித்துக் கொண்டிருந்தனர், எந்த பயனுமில்லை. இன்னும் அதிகமாக சத்தமிட்டு அழைத்தனர். ஆயினும் பதிலுமில்லை, அக்கினியும் இறங்கி வரவில்லை.

தொடர்ந்து பலிபீடத்தின் மீது குதித்து ஆடவும் கத்தியால் தங்களைக் கீறிக்கொள்ளவும், தங்கள் சரீரத்திலிருந்து இரத்தம் வெளியேறவும் செய்தனர். இன்னமும் ஒரு பொறிகூட ஏற்பட வில்லை.

மூன்று ஆண்டுகளாக பூமியின் மீது மழை பெய்யாதிருந்தது. இன்றைய முயற்சியும், பயிற்சியும் வீணும் வியர்த்த மமாகி, ஏமாற்றமும் தோல்வியும் ஏற்பட்டது.

ஒன்று ராஜாக்கள் 18-ம் அதிகாரத்தில் காணப்படும் அனுபவமே இன்று திருச்சபையிலும் காணப்படு கிறது. எண்ணிக்கையிலும் செயல்பாட்டி லும் முன்னேறி வரும் சபையில் தேவ பிரசன்னத்தின் மகிமை வெளிப்பட வில்லை.

எண்ணிக்கை, செயல்பாடுகள், உற்சாகம், முயற்சிகள் ஆகியவற்றால் ஆவிக்குரிய வலிமையை பெறமுடியாது. நமது சபையில் பல்வேறு ஆராதனைகள், தியான முகாம்கள் போன்ற திட்டங் களுக்குக் குறைவில்லை. எனவே அதிக சத்தத்தை எழுப்புகிறோம். நாம் சுறுசுறுப்பாகவும், உத்தமமாகவும் காணப்படுகிறோம். ஆனால் பரலோகம் மிகுந்த அமைதலுடன் காணப்படுகிறது. அக்கினி இறங்கி வரவில்லை.

நாம் முயற்சி செய்யாமலிருக்க வில்லை. நமது நிகழ்வுகள், முன்னேற்றப் பணிகள், கூடுகைகள், கணக்கீடுகள், ஞானஸ்நானங்கள், குழுக்கள் மற்றும் எழுப்புதல் கூடுகைகள் போன்ற யாவும் நமக்கு மிகவும் இன்றியமையாத பரம அக்கினியைக் கொண்டுவர முடியவில்லை.

ஆவிக்குரிய தலைவர்களும் உற்சாகமுள்ள அனைவரும் நெருப்புப் பொறிகளை உருவாக்க முனைவுடன் செயல் படும்போது, சபை மக்கள் உலகத்தோடு சேர்ந்து பின்வரிசையில் நின்றுகொண்டு அக்கினி எங்கிருக்கிற தென்பதை அதிசயத்தோடு காத்திருந்து எதிர்பார்த்து திருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது. வருகையின் தூதன் ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்குங்கள்

(3-ம் பக்க தொடர்ச்சி)

அக்கினி இறங்கி வர அழைப்பு

பாகாலின் தீர்க்கர்கள் தோல்வியை தழுவ, தன்னந்தனியனாய் களத்தில் காலடி வைக்கிறான் எலியா. மூன்று ஆண்டுகளுக்கு முன் மழை பெய்யாது என்ற தீர்க்கதரிசனத்தைக் கூறி அரசனது கோபத்திற்குள்ளாயிருந்தான். இப்போது மரண பயமின்றி முன்னே நிற்கிறான்.

மக்களை அழைத்து கவனிக்கும் படி கூறிய அவன் வித்தியாசமானவன். அன்றைய மார்க்கத் தலைவர்களைவிட அவன் வித்தியாசமானவன். அவன் சிறுபான்மையினரைச் சார்ந்தவன்.

அவன் பாரம்பரியங்களை அகற்றுகிறான். வேலிகளைத் தகர்த்தெறி கிறான். யெகோவாவுக்கு நேராக மக்களது கவனத்தைத் திருப்புகிறான். பனிரெண்டு பெரிய கற்களை ஒவ்வொன்றாக எடுத்து பலிபீடத்தை உண்டுபண்ணுகிறான். பலிப்பொருளை ஆயத்தப்படுத்தி பலிபீடத்தின்மேல் வைக்கிறான்.

மக்களிடமாகத் திரும்பி, பலி பீடத்தைச் சுற்றிலுமாகவும், பலியின் மேலும் நான்கு குடம் தண்ணீர் ஊற்றும் படி செய்தான்.

நனைந்த விறகு பற்றி எரியுமா? அவன் புத்தி சுயாதீனத்தை இழந்து விட்டதாக மக்கள் கருதியிருக்கலாம். மூன்று வருடங்களுக்கு மேலாக மழை பெய்யவில்லை என்பதை அறிந்தவனா?

தொடர்ந்து ஒரு சிறிய, எளிய ஜெபம். அக்கினி வந்துவிட்டது. தீப்பெட்டியில்லை, மண்ணெண்ணெய் இல்லை, மந்திர சக்தியாலான காரியங் களுமில்லை. ஆட்டம் பாட்டமு மில்லை, நடிக்கவுமில்லை. ஆனால் உண்மையான அக்கினி இறங்கியது. அது தண்ணீர் முழுவதையும் நக்கி, பலியையும் அதோடு மரம், கல், தரையிலிருந்த தூள் யாவற்றையும் பட்சித்துவிட்டது. இது தேவ அக்கினி. பரலோகத்திலிருந்து இறங்கிய அக்கினி.

தேவ அக்கினி என்றால் என்ன?

தேவ அக்கினி இறங்கி வருவதைக் காட்டிலும் மிகப்பெரிய தேவை சபைக்கு இன்று இல்லை. தேவ அக்கினி என்று நாம் குறிப்பிடும்போது தேவனுடைய மகிமையின் பிரசன்னம் வெளிப்படுவதையே நாம் வெளிப் படுத்துகிறோம். நாம் இயற்கைக்கு மேலான ஒரு வல்லமையைக் குறித்துப் பேசுகிறோம்.

அது இனிய கூடுகைகளைவிட மேலான சேவையைக் குறிக்கிறது. அது மானிட முயற்சிகளால் ஏற்படும் விளைவு களைக் காட்டிலும் மேலான விவரிக்க இயலாத ஒன்று. மனிதனது திட்டம், யோசனை ஆகியவற்றால் ஏற்படக் கூடாதது.

தூய ஆவியானவர் மனிதரது வாழ்க்கையில் சாதாரணமாகக் கிரியை செய்வதைக் காட்டிலும் இது மேலானது. தேவ ஆவியானவர் அசாதாரணமாக நம்மில் ஊற்றப்பட்டு அதன் மூலம் அவரது மகிமை நமது வாழ்விலும் சபை வாழ்விலும் வெளிப்படும் அனுபவம் இது.

அக்கினி செய்வது என்ன?

அக்கினி இறங்கும் போது தேவன் உண்மையாகவே யார் என்பதை நாம் காணமுடிகிறது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அவரை அக்கினியின் தேவனாக வெளிப்படுத்துகின்றன.

சீனாய் மலையில் கட்டளை கொடுக்கப்பட்ட போது தேவன் தம்மை மின்னல்கள், இடிமுழக்கங்கள், மேலும் ஒலிகள் மூலம் வெளிப்படுத்தினார். வேதபுத்தகத்தின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு பரலோகத்தின் சிங்காசன அறையின் ஒரு சிறு காட்சி காண்பிக்கப்பட்டது. "அந்த சிங்காசனத்திலிருந்து மின்னல்களும், இடி முழக்கங்களும், சத்தங்களும் புறப்பட்டன" வெளி.4:5.

அக்கினி இறங்கும்போது தேவன் தமது சபையைத் தமக்கு சொந்தமாக்கிக் கொள்வார். ஜனங்களின் முகத் தோற்றத்தில் மாற்றம் காணப்படும். அக்கினி அசுத்தமானவைகளையும், லௌகீகமானவைகளையும், அநித்திய மானவைகளையும் தகனித்துப்போடும்.

தேவ அக்கினி சுத்திகரித்து, உருக்கி, விழுங்கக்கூடிய தன்மைகளை உடையது. "நமது தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்" எபி.12:29. "அவர் புடமிடுகிற அக்கினி" மல்.3:2. எனவே அசுத்தங்களை மேற்பரப்பிற்குக் கொண்டுவந்து எரித்துவிடுவார்.

அக்கினி விழும்போது பாவம் நியாயந்தீர்க்கப்பட்டு, பாரபட்சமின்றி தண்டிக்கப்படும். மாம்சத்தின் வெளிப் படையான பாவங்கள் மட்டுமல்ல ஆவியில் காணப்படும் தந்திரமான இரகசிய பாவங்களும் தண்டனை பெறும். அந்தஸ்து என்னும் முகமூடி அகற்றப்படும், நடிப்பு விலக்கப்படும். எல்லாவற்றையும் பார்க்கிறவரும் அறிகிறவருமான தேவனுடைய சமூகத்தில் மனிதனின் ஆத்துமா வெளியரங்கமாயிருக்கும்.

அக்கினி இறங்கும்போது ஆழமான பாவ உணர்வும், பாவத்தைக் குறித்த துக்கமும் உண்டாகும். சோதனை செய்யும் தேவனுடைய விளக்கு என்னும் அவரது பரிசுத்தம், முன்பு ஏற்புடைய தாய் தோன்றியவைகளைத் திடீரென வெறுப்படையச் செய்யும். நிர்விசாரம் புலம்பலாய் மாறும். பாவத்தைக் குறித்த உதாசீனம் விலகி, நொறுங்குதலும் உத்தம மனந்திரும்புதலும் ஏற்படும்.

மேலும் விசுவாசியின் முயற்சி களும் பணிகளும் சோதிக்கப்படும். ஆவிக்குரிய செயல்பாடு என்று முன்பு காணப்பட்டவை மாம்சீகமானவை என்றும், அவை மரம், வைக்கோல் போன்று எரிக்கப்பட்டும் போகக் கூடியவை என்றும் வெளிப்படுத்தப் படும்.

அக்கினி இறங்கும்போது பாரம் பரிய செயல்பாடுகளும் திட்டங்களும் ஆண்டவருடைய ஆளுகைக்குள் கொண்டு வரப்படும். தூய ஆவியானவர் சபையின் பணியிலும் செயல்பாடு களிலும் தலைமை வகிக்க ஆரம்பித்து விடுகிறார்.

அக்கினி இறங்கி வரும்போது வல்லமை, ஜீவன், பரிசுத்தம், நிரம்பி வழியும் வாழ்வு, உத்தமம் ஆகியவை வாழ்வில் காணப்படும்.

ஆனால் இன்று தேவ அக்கினி எங்கே? அவரது பிரசன்னம் வல்லமை ஆகியவை காணப்படுகிறதா? அவரது பிரசன்னத்தால் ஏற்படும் பிரமிப்பு, ஆச்சரியம், பயம் இவை எங்கே?

இருதயம் நொறுங்கி வெளிப் படும் கண்ணீர் எங்கே? தேவ ஜனத்தின் மத்தியில் காணப்படும் தேவபிரசன்னத் தால் மக்கள் உணர்வடைந்து, இழந்து போன மக்கள் முகங்குப்புற விழுகிறார் களா? எந்த சபையில் தேவ அக்கினி இறங்கி வந்திருக்கிறது? யாதொரு ஓய்வு நாட்பாடசாலையிலோ, பள்ளியிலோ, வகுப்பிலோ, இல்லத்திலோ, பெற்றோர், தனிநபர், வாலிபர் மத்தியில் ஆவியானவர் இறங்கியுள்ளாரா?

நாம் ஏன் இந்த அக்கினியை பெறவில்லை

நாம் இதன் தேவையை உணராத படியால் இதனைப் பெற்றுக் கொள்ள வில்லை. அவரது மகிமையைத் தேடாமல் வாழ்வதில் திருப்தியடைந்திருக்கிறோம்.

நமது நாடு, சபைகள், இல்லங்கள், வாழ்வுகள் அனைத்தும் பெரும்பாலும் தேவனுடைய மகிமை வல்லமை இவையற்றே காணப்படுகின்றன. நமது தேவைகள் என்ன என்று கேட்கும்போது பெரிய கட்டிடங்கள், அதிகமான பணம், அதிக தன்னார்வ தொண்டர்கள், அதிக உதவியாட்கள் அல்லது அதிக உபகரணங் கள் தேவை என்கிறோம். ஆனால் நமது உண்மையான தேவை தேவன் என் பதைக் கண்டுகொள்ள முடியவில்லை.

நாம் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியால் அவர் தமது பிரசன்னத்தை நம்மைவிட்டு விலக்கி விட்டார். ஆனால் நமது கண்களோ இருளுக்குப் பழகிவிட்டன. நமது சொந்த முயற்சியையே பயன்படுத்தப் பழகிவிட்டோம். யாரும் இதன் விளைவைக் குறித்துக் கேள்வி எழுப்பு வதில்லை.

நாம் நமது உண்மையான ஆவிக்குரிய நிலையைக் குறித்தும் தேவையைக் குறித்தும் பார்வையற்ற வர்களாயிருக்கிறோம். லவோதிக்கேயா சபையைப் போல "நான் ஐசுவரியவா னென்றும் திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்" வெளி.3:17 சொல்லுகிறோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(4-ம் பக்க தொடர்ச்சி)

கிறிஸ்தவ போதகர்கள் கிறிஸ்தவம் செழித்து வளருவதாகக் கூறுகிறார்கள். மற்றவர்கள் எழுப்புதலின் வேதனைத் துடிப்பிலிருப்பதாக ஆணித் தரமாகக் கூறுகிறார்கள்.

அப்படியானால் ஏன் எல்லா விதமான சன்மார்க்க அசுத்தங்களும் அளவுகடந்து காணப்பட வேண்டும்! வேதத்தைப் பிரசங்கிக்கும் சபைகளில் விவாகரத்துகள் ஏன் சாதாரணமாக மலிந்துவிட்டது?

ஏன் பெரும்பாலான கிறிஸ்தவர் கள் கிறிஸ்துவைப் பற்றி ஒருவருக்கும் அறிவிக்கவில்லை? சபைகள் ஏன் பிளவுபடுகின்றன? ஏன் கிறிஸ்தவர்கள் போர்கிறிஸ்தவர்களாகவும், கனியற்றவர் களாகவும், வெறுமையாகவும் ஆவிக் குரிய அடிமைத்தனத்திலுமிருக்கிறார் கள்? நாம் செய்ய வேண்டிய கடமை களில் ஏன் விருப்பமற்றிருக்கிறோம்?

நாம் சரியானதையே செய்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும்வரைக்கும் தேவனிடம் எழுப்புதல் அக்கினியை அனுப்பும் என்று கதறமாட்டோம்.

நாம் அக்கினியை பெறாம லிருப்பதற்கான இன்னொரு காரணம் நாம் உண்மையாக இதனை வாஞ்சிக்கவில்லை. வாஞ்சிக்கிறோம் என்று சொன்னாலும் மக்களது கவனத்தை இழுத்து, சபையையும் கூடுகைகளையும் நிரப்பி, திரளான காணிக்கைகளை வருவிப்பதும், பிரச்சனைகளைத் தீர்த்துவிடுவதுமான ஒரு அக்கினியையே வாஞ்சிக்கிறோம்.

காயம் ஏற்பதும், பட்சிப்பதும், வெளியரங்கமாக்குவதுமான அக்கினியை நாம் விரும்புவதில்லை. தேவன் நம்மிடையே வந்துவிட்டால் என்ன நடைபெற்றுவிடுமோ என்று பயப்படுகிறோம். நாம் கட்டுப்பாட்டுக் குள் வைக்கக்கூடிய ஒரு மார்க்க அனுபவத்தையே தேடுகிறோம்.

எழுப்புதலுக்கு முன்னால் கூறப் பட வேண்டிய விதமான பிரசங்கத் தையும் நாம் விரும்பவில்லை. அனேகர் ஊக்கப்படுத்துவதும், அன்பு நிறைந்தது மான செய்திகளை மட்டுமே விரும்பு கின்றனர். சத்தியம் அவர்களுக்கு வேண்டியதில்லை.

பாவம், மனந்திரும்புதல், பரிசுத்தம், இதயம் உடைதல், பாவ அறிக்கை ஆகியவை எதிர்மறையாகக் கருதப்படுகின்றன. "மக்களை குற்ற உணர்வுக்குள்ளாக்குகிறீர்கள். அவர் களுடைய சுயமரியாதை அழிக்கப்பட்டு விடுகிறது" என்பது அவர்களது நினைவு.

மக்களில் தேவனைப் பற்றிய கரிசனை, மக்களைப் பற்றிய கரிசனையை விட அதிகமாயிருக்க வேண்டும். உலகத்தால் வஞ்சிக்கப்பட்டு நமது வேதபோதனை நமது சுய உருவத்தின் மீது கவனம் செலுத்தி தேவன் மீது கவனம் செலுத்துவதை மறந்து விட்டது.

நாம் அக்கினியைப் பெற்றுக் கொள்ளாததற்கான இன்னொரு காரணம் அது இன்று நடைபெறக்கூடும் என்பதை நாம் விசுவாசிக்கவில்லை. நம்மையும் நமது எண்ணங்களையும் மட்டும் நியாயப்படுத்த தேவனுடைய வார்த்தையை தூரமாக்கிவிட்டோம். "இது பழைய ஏற்பாடு, இன்று தேவன் அப்படி செய்கிறதில்லை" என்று வாதாடுகிறோம்.

எழுப்புதலின் சரித்திரத்தை மிகவும் கவனமாகப் படித்தால் ஒவ்வொரு எழுப்புதலும் ஒரு முறையில் பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்ற சம்பவங்களின் ஒரு மறுபடி அனுபவம் என்று கூறலாம். ஆவியானவர் தமது ஜனங்களின் மீது ஒரு அசாதாரண முறையில் பொழியப்பட்டார். தேவனுடைய பிரசன்னமும், வல்லமை யும் வெளிப்பட்டன.

ஆனால் நாம் தூய ஆவியான வரின் தெய்வீக பொழிவை கூடாதது என்று பிடிவாதம் பண்ணுகிறோம். நாம் அற்புதங்களுக்காக ஜெபிக்கிறதில்லை. ஏனென்றால் இந்த நூற்றாண்டில் தேவன் அற்புதங்களை செய்வார் என்பதை நாம் விசுவாசிப்பதில்லை.

இறுதியாக நாம் அக்கினியை பெற்றுக்கொள்ளாமலிருப்பதற்கான காரணம் நாம் அதற்குரிய கிரயத்தை செலுத்த விரும்பவில்லை. நாம் கிரயமற்ற, வேதனையில்லாத முறையில் இமைப்பொழுதில் பெற்றுக் கொள்ளும் எழுப்புதலை விரும்புகிறோம். எழுப்பு தலின் நேர்மறையான அனைத்து விளைவுகளையும் இலாபங்களையும் எந்த ஒரு கிரயமுமின்றி அல்லது மிகச்சிறிய கிரயத்தில் பெற்றுக்கொள்ள நாடுகிறோம்.

வேதனையின்றி நன்மை பெற விரும்புகிறோம். புது வாழ்வின் சந்தோஷத்தை பிரசவ வேதனையைக் கடந்து செல்லாமல் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம். ரண சிகிட்சையின்றி சுகம்பெற வாஞ்சிக்கிறோம். புலம்ப லில்லாமல் ஆனந்த களிப்பை எதிர் பார்க்கிறோம்.

முதலாவது சிலுவையின் பாடுகளைக் கடந்து செல்லாமல் உயிர்த் தெழுதலின் வல்லமைக்குள் பிரவேசிக்க நாடுகிறோம். நமது அட்டவணை, திட்டங்கள், ஸ்தாபனங்கள் யாவும் தொடப்படாமல் இருக்க விரும்பு கிறோம். நமது திட்டங்கள் பாதிக்கப் படாமலும் நமது பாரம்பரியங்கள் மீறப்படாமலிருக்க முயற்சிக்கிறோம்.

எழுப்புதல் கடினமானதும், பயிர்செய்யப்படாததுமான நிலம் போன்ற நமது இருதயத்தை உழுது அதில் விதையை விதைத்து இறுதியில் அறுவடையைப் பெறுவதற்கு இணை யானது. உழுவது வேதனையானது. ஆனால் அதை மறுக்கமுடியாது. அது அதிக சமயத்தை எடுக்கக்கூடியது.

கிரயத்தில் சமயத்திற்கு முக்கியமான ஒரு பங்கு உண்டு. வாரக் கடைசி நாட்களில் சிறிய எழுப்புதல்கள் நமக்கு எளிதாக நமது அட்டவணைக் குள் வரலாம். ஆனால் அவை உத்தம எழுப்புதல்களாயிருக்க முடியாது.

தேவன் அக்கினியை அனுப்பு வதற்கு முன்பாக எலியா ஆயத்தம் மற்றும் சுத்திகரிப்பு ஆகிய முறைகளைக் கடந்து செல்ல 3½ ஆண்டுகளாயிற்று. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களின் விளைவை இதே கால அளவில் அனுபவித்தனர். இறுதியில் அவர்கள் தேவன் அக்கினியை அனுப்பாமல் வேறு வழியில்லை என்ற நிலைக்கு எட்டினர்.

நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கக்கூடாத அளவுக்கு சுறுசுறுப்பா யிருக்கிறோம். அவருக்குக் காத்திருக்கிற வர்களையே அவர் சந்திக்க முடியும் (ஏசா.64:4) நாமோ நமது கால அட்ட வணையின்படி அவர் அக்கினியை அனுப்ப எதிர்பார்க்கிறோம்.

தேவன் நமது திட்டங்களுக்கும், அட்டவணைக்கும் உட்படுபவரல்ல, அவர் தேவன், அவரது சித்தத்தின்படி செயல்பட அவருக்கு சுயாதீனமளிக்க வேண்டும்.

தேவன் அக்கினியை அனுப்ப நமது பாரம்பரியங்களையும் வழிமுறை களையும், திட்டங்களையும் ஒதுக்கி விட்டு அவருக்கு இடமளிக்க வேண்டும். அவரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் யாவும் அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் கிரயத்தின் ஒரு பகுதியாகும்.

பலிசெலுத்தப்படாமல் அக்கினி இறங்குவதில்லை. இஸ்ரவேலருக்கு பலிபீடத்தில் தங்கள் தண்ணீரை ஊற்றுவது சரியாயிருந்தது. ஆனால் தேவனுக்கு அது அவசியமல்ல. ஏனெனில் அவரே அதை அளிக்கிறவர்.

தேவன் உங்களிடமோ, உங்கள் சபையிலோ எந்த பலியை விரும்புகிறார் என்று நானறியேன். உங்கள் புகழையோ, அல்லது விமர்சனங்களை சகிப்பதையோ தவறான புரிந்து கொள்ளப்படுதல், புறந்தள்ளப்படுதல் ஆகியவற்றை அவர் கேட்கலாம். உங்கள் வேலையை விட்டு விடவோ, உங்கள் சேமிப்பு அல்லது ஓய்வூதியத்தையோ பலிபீடத்தில் படைக்க சொல்லலாம்.

மொத்தமாகக் கூறின் அவர் நமது முழு வாழ்வையும் கேட்கிறார். நாம் நம்மைப் படைக்கும்போதுதான் பரத் தின் அக்கினி இறங்கி, தேவன் தமது வல் லமையை உலகுக்கு வெளிப்படுத்தக்கூடும்.

உங்கள் வாழ்விலும், சபையிலும் தேசத்திலும் அக்கினி இறங்கி வர வாஞ்சிக்கிறீர்களா? இதற்காக என்ன கிரயம் செலுத்த முன்வருவீர்கள்? உங்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற தாயிருப்பதை கொடுப்பீர்களா? என் னோடு சேர்ந்து அக்கினியின் தேவனை நோக்கி எலியாவைப் போல கதறுவோம்.

"எங்களை மறுபடியும் உயிர்ப்பி யும், ஒவ்வொரு இருதயத்தையும் உம் அன்பால் நிரப்பும். ஒவ்வொரு ஆத்துமாவும், பரத்தின் அக்கினியால் தூண்டிவிடப்படட்டும். அல்லேலூயா உமக்கே மகிமை. எங்களை மறுபடியும் உயிர்ப்பியும்".

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காசோலை திரும்ப வந்து விடும். கூடுதல் விபரம் தேவையானால் தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்ளுங்கள், நன்றி.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

சுமார் 28 ஆண்டுகள் ஒரே இடத்தில் எழுப்புதலுக்காக ஜெபித்த பிற்பாடு, கர்த்தருடைய சித்தப்படியே 2013-ம் ஆண்டு தூத்துக்குடியிலும், 2014-ம் ஆண்டு பாளையங்கோட்டையிலும், 2015-ம் ஆண்டு சிவகாசி ஷெக்கையினா அசெம்பிளி ஆப் காட் சபையிலும் **எழுப்புதலுக்காக இதய கதறல்** 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்த அன்பின் ஆண்டவர் உதவிச் செய்தார்.

2016-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் உபவாசித்து ஜெபிக்க ஆண்டவர் எங்களை ஏவினபடியால், 2016-ம் ஆண்டு 12 உபவாச ஜெபங்களையும், 2017-ம் ஆண்டு 12 உபவாச ஜெபங்களையும் நடத்தி முடிக்க ஆண்டவர் இரக்கம் பாராட்டினார்.

நீங்கள் அறிந்திருக்கிறபடி, 2018-ம் ஆண்டு பாண்டிச்சேரி, மும்பை, மைசூர், அந்தமான் ஆகிய **4** வெளி மாநிலங்களுக்கும் செல்ல ஆண்டவர் வழிநடத்தினார். 2019-ம் ஆண்டுக்கான உத்தேசமான பட்டியலை கீழே அச்சிட்டுள்ளோம். உங்கள் சபை கட்டடத்தை ஒரே ஒரு விசை 2019-ம் ஆண்டு திறந்து தருமாறு பட்சமாய் கேட்கிறேன்.

வாசகர் எழுப்புதலுக்காக இதய கதறல் உபவாச ஜெபத்திற்காக ஊக்கமாக ஜெபிக்கவும் உதாரத்துவமாய் தாங்கவும் அதிக அன்பாய் கேட்கிறேன்.

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

ஜனவரி	05.01.2019 1-வது சனி	CSI Christ Church South Thamaraikulam K.K.Dt., - 629 701.
பிப்ரவரி	16.02.2019 3-வது சனி	El Shaddai Church, WZ 62 G Possangipur,Janakpuri N.Delhi-110 058
மார்ச்	16.03.2019 3-வது சனி	Bethesda Maruruba Thirusabai Venkappakkam & P.O. Kalpakkam Via., Kancheepuram - 603 102.
ஏப்ரல்	13.04.2019 2-வது சனி	Methodist Tamil Church Behind St. Stephen's Orthodox Church Christ Nagar, Ghodbunder Rd. Manpada, Thane-400 060.
மே	17.05.2019 3-வது வெள்ளி	City A.G.Church Ramaiah Colony 2nd St., Bungalow Stop, Avinasi Road Behind Angel Hotel, Tirupur - 638 601.
ஜூன்	06.06.2019 2-வது சனி	Agape Bible Fellowship 12-B, Cross, Church St., Pillana Garden 3rd Stage, Bangalore - 600 045.
ஜூலை	00.07.2019 3-வது சனி	
ஆகஸ்ட்	00.08.2019 3-வது சனி	
செப்டம்பர்	00.09.2019 3-வது சனி	Gujarat
அக்டோபர்	00.10.2019 3-வது சனி	True Life Mission Takkuki Bouli East, Sevapuri, Varanasi Uttar Pradesh - 221 403.
நவம்பர்	00.11.2019 3-வது சனி	
டிசம்பர்	07.12.2019 1-வது சனி	Christucoil LM Church Palliyadi K.K.Dist. - 629 169.

ஆசிரியர் கடிதத்தை தொடர்ந்து இந்த மாதமும் எனது தகப்பனார் எழுதிய கட்டுரையை வெளியிட்டுள்ளேன். ஆவியானவர் சொல்வதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். வெளி.2:7.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங்கீதம் 103:1,2

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 94980 30295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 89404 64531
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

கிறிஸ்தவன் யார்? கிறிஸ்து சபை எது?

"சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று". "சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்கு நாள் பெருகின" அப்.11:26; 16:5

பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்து சபை பிறந்தது. கிறிஸ்துவின் அடியார் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இன்று உலகத்தில் கிறிஸ்தவ சபைகளுக்குக் கணக்கில்லை. நூற்றுக்கணக்கான நாமங்களால் அவை அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சபைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் தங்கள் விசுவாசக் கோட்பாடுகளும், தாங்கள் கையாளும் முறைமைகளுமே சரி என்று நம்புவது மட்டுமல்ல, பிடிவாதம் பண்ணவும் வைராக்கியம் கொள்ளவும் துணிகின்றனர். உண்மையாய்ச் சிந்திப் போருக்கு இவ்வித பிரிவினை அதிக மனவேதனையைக் கொடுக்கிறது. அது சுவிசேஷம் பரம்புவதற்குப் பெருந்தடையாய் இருப்பதோடு, புறம்பேயிருந்து பார்ப்போர் எவரும் பழிப்பதற்கு ஏதுவாயுமிருக்கிறது.

சபைக்குள் ஐக்கியத்தை உண்டு பண்ணுவதற்காக இன்று எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள் கொஞ்ச மல்ல. ஐக்கியம் இன்றியமையாதது; அது மறுக்கமுடியாத உண்மை. இரு வகையான ஐக்கியம் உண்டு. ஒன்று அன்பிலும் ஆவியிலும் பொருந்துவதால் ஏற்படும் ஐக்கியம். "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி....." (யோவா.17:22) என்று நமதாண்டவர் ஜெபித்தபோது அவர் கருதிய ஐக்கியம் இதுவே. பிதா பிதாவாகவும், குமாரன் குமாரனாகவுமேதான் இருந்தார்கள்; தங்கள் பெயர்களையோ, கிரியையின் முறைகளையோ அவர்கள் மாற்றவுமில்லை, ஒரு புதிய உறவையோ ஒழுங்கையோ உண்டுபண்ணவுமில்லை, ஆயினும் அவர்கள் ஒன்றாகவேயிருந்தார்கள் யோவா.10:30.

ஆதாம் ஆதாமாகவும், ஏவாள் ஏவாளாகவுமே இருந்தனர். அவர்கள் ஒரே பெயரைத் தரித்துக் கொள்ளவோ ஒரே விதமான ஆடையை அணிந்து கொள்ளவோ எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆயினும் அன்பு அவர்களை ஒன்றாக்கிற்று. ஆகையால் தேவன் "அவர்கள் ஒரே மாம்சமாயிருப் பார்கள்" என்றார். ஆதி.2:24; எபே.5:31. இவ்வித ஐக்கியத்தையே கர்த்தர் தமது சபையில் எதிர்பார்க்கிறார். இதன் நிறைவேறுதலின் ஏகவழி எல்லாச் சபைகளும் ஆதிச் சபையைப் போலாவதே. ஆதிச் சபையே மாதிரிச் சபை; அக்காலக் கிறிஸ்தவர்களே மாதிரிக் கிறிஸ்தவர்கள். நடபடியாகமம் ஆதிச்சபையின் படத்தை நாம் தெளிவும் திட்டமுமாய் கண்டு கொள்ளத்தக்கதாக ஆவியானவரால் வரையப்பட்டது. அதை ஜெப சிந்தையோடு படித்து நமது சபைகள் உண்மையாய்க் கிறிஸ்துவின் சபைகள் தானா என்பதைக் கண்டுபிடிக்க ஆவியானவர்தாமே உதவி செய்வாராக.

1. கிறிஸ்துவின் சபை
இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்

சுவிசேஷத்தைக் கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்டு, மனந்திரும்பி 2:37,38 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அந்த விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலம் அறிக்கை செய்தவர்களே அக்கால சபையார். இவ்வாறு இரட்சிக்கப்பட்டவர்கள் அனுதினமும் சபையில் சேர்ந்து கொண்டிருந்தார்கள் 2:47. இரட்சிப்புக்கு இன்றியமையாதது இரட்சகர் பேரிலுள்ள விசுவாசமே 16:31. "விசுவாசம்" என்னும் பதத்தை இந்நூலில் ஏறக்குறைய 50 தடவை காணலாம். அவரை விசுவாசித்துப் பற்றிக் கொண்டவர்கள் "விசுவாசிகள்" என்று அழைக்கப்பட்டனர்.

ஆதிச்சபையில் கடமைக் கிறிஸ்தவர்களோ, கட்டாய கிறிஸ்தவர்களோ, கல்லறைத் தோட்டக் கிறிஸ்தவர்களோ, உத்தியோகக் கிறிஸ்தவர்களோ, ஊதியக் கிறிஸ்தவர்களோ, பண்டிகை கிறிஸ்தவர்களோ, பிறவிக் கிறிஸ்தவர்களோ, பேர்க் கிறிஸ்தவர்களோ, கோவில் கிறிஸ்தவர்களோ கிடையாது. இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே அங்கு இருந்தார்கள். "மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை" 5:13. நமது "சபை" எப்பேர்ப்பட்டவர்களால் நிறைந்திருக்கிறது?

2. கிறிஸ்துவின் சபை
ஒருமனமுள்ளவர்களின் கூட்டம்

ஆதிச்சபையின் அங்கத்தினர் யாவரும் மனம் புதிதாகி மறுரூபமடைந்தவர்கள். ரோம.12:2. ஆகவே அவர்களெல்லாருக்கும் ஒரேமனம் உண்டாயிருந்தது. பிரிவினை, சண்டை, வழக்கு, வாது, பிடிவாதம், கட்சிப்பாடு முதலியவற்றிற்கு அங்கே இடமேயில்லை. பெரியவன் சிறியவன் என்ற வேறுபாடும் கிடையாது. பேதுரு அப்போஸ்தலனும், இயேசுவின் தாயும் இதர விசுவாசிகளோடு ஒன்றுபோல முழங்காற்படியிட்டு ஜெபித்தனர் 1:14.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் ஒரே நாட்டத்தோடு, ஒரே வாஞ்சையோடு, ஒரே நோக்கத்தோடு, ஒரே எதிர்பார்ப்போடு கூடினார்கள் 2:1. அவர்கள் ஜெபிப்பதில் மட்டுமல்ல (4:24) வசனத்தைக் கேட்பதிலும், (8:6) ஆலோசித்துத் தீர்மானம் செய்வதிலும் (15:26) ஒருமனமுள்ளவர்களாகவே யிருந்தார்கள். இவ்வித ஐக்கியம் அவர்கள் ஆவியால் நிரப்பப்படவும், (2:1,2) சந்தோஷமுடையவர்களாயிருக்கவும், (2:16) தைரியமாய் சாட்சி சொல்லவும், (4:24-31) பிறரால் மேன்மையடையவும் (5:12,13) ஏதுவாக்கிற்று. நமது "சபை"களில் இவ்வித ஒருமனம் காணப்படுகிறதா?

3. கிறிஸ்துவின் சபை ஜெபிக்கிறவர்களின் கூட்டம்

ஆதிச்சபைக்கு ஆராதனை ஒழுங்கு உண்டாயிருந்ததில்லை. ஆதிக் கிறிஸ்தவர்கள் திருவிழாவுக்கோ, திருமண வீட்டிற்கோ போவதுபோல ஆடையாபரணங்களாலும், புஷ்பாதிகளாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு, அழகிய ஆசனங்களில் அசையாமல் அமர்ந்துகொண்டு சொல்லலங்காரச் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டு செல்லவுமில்லை. அவர்கள் ஜெபிப்பதற்காகச் சென்று அழுவதற்காக அமர்ந்து முறையிடுவதற் காக முழங்காற் படியிட்டார்கள்.

ஆதிச்சபையார் எதையும் ஜெபத்தோடுதான் செய்தார்கள் 1:25. ஜெபிப்பதே அவர்களுடைய வேலை 1:14. அவர்கள் ஊக்கமாய் ஜெபித்தார்கள்; (4:31) உபவாசித்து ஜெபித்தார்கள் (13:3; 14:23) விடாப்பிடியாய் ஜெபித்தார்கள் (12:5-12) ஜெபவேளையில் ஜெபித்தார்கள்; (3:1) எந்த வேளையிலும் ஜெபித்தார்கள்; (6:4; 10:2) வீட்டில் ஜெபித்தார்கள்; (10:9) குறிக்கப்பட்ட இடங்களில் ஜெபித்தார்கள்; (16:13) எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் ஜெபித்தார்கள்; (16:25) ஒருமனதோடு ஜெபித்தார்கள்; (1:14) உரத்த சத்தமாய் ஜெபித்தார்கள்; (4:24) முழங்காற்படியிட்டு ஜெபித்தார் கள் 20:36.

இவ்வித ஜெபம் அதிசய பலனைப் பிறப்பித்தது. அவர்கள் தேவ வல்லமையால் நிரப்பப்பட்டார்கள் (4:31) தேவ தரிசங்களைக் கண்டார்கள், (10:10) தேவதூதரின் உதவியைப் பெற்றார்கள் (10:3) இரும்புக் கதவுகள் திறந்தன (12:10; 16:26) சங்கிலிகள் கழன்றன (12:7) நோயாளிகள் சுகமடைந்தனர் (28:8) மரித்தோர் உயிரோடெழுப்பப்பட்டனர் 9:40 இக்கால "சபை" இவ்வித ஜெபத்தை விரும்புகிறதா?

4. கிறிஸ்துவின் சபை ஆவியால் நிரப்பப்பட்டவர்களின் கூட்டம்

சபை பெந்தெகொஸ்தே நாளில் தான் உருவானது. அந்நாளில் ஆவியால் நிரப்பப்பட்ட 120 பேரின் கூட்டமே முதல் சபை. பெந்தெகொஸ்தே நாளில் வந்த ஆவியானவர் அதுமுதல் சபையில் நிரந்தரமாய்த் தங்குவதால் மறுபடியும் அவர் இறங்குவதற்கு அவசியமில்லை என்னும் அபிப்பிராயத்துக்கு இப்புத்தகம் சிறிதும் இடமளிக்கவில்லை; ஏனெனில் அவ்வித அனுபவத்தை இங்கே மறுபடியும் மறுபடியும் பார்க்கிறோம். 4:31; 10:44; 13:52; 19:6 காண்க. பிற்காலங்களில் வல்லமையான ஊழியங்களை நிறைவேற்றின பக்தர்களான மூடி, பின்னி, வெஸ்லி முதலியோரும் இவ்வித அனுபவத்தை அடைந்தவர்களே.

"பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்பதும், (யோவா. 20:22) "ஆவியினால் நிறைந்திருங்கள்" என்பதும் (எபே.5:18) நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை. ஸ்தேவான் இன்று உயிரோடிருந்தால் நமது பீடங்களில் நின்று "வணங்காக் கழுத்துள்ளவர்களே.... உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" என்றுதான் கத்துவானா? 7:51. "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" 19:2.

இப்புத்தகத்தை "ஆவியான வரின் நடபடிகள்" என்றும் அழைப்பதுண்டு. ஆதிக் கிறிஸ்தவர்கள் ஆவியால் நிரப்பப்பட்டதோடு ஆவியானவரா லேயே நடத்தப்பட்டார்கள். ஆவியான வர் "சொன்னார்" (8:29) "திருவுளம்பற்றினார்" (13:2) "போக வொட்டாதிருந்தார்" (16:7) என்றும், ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்ததே ஆதிச்சபையின் சித்தியின் அந்தரங்கம் என்றும் நாம் கண்டு கொள்ளக்கூடும். நமது சபைகளின் தோல்வியின் காரணம் ஆவியான வருடைய ஆலோசனையை அறிந்து கொள்ளத்தக்கதாக அமர்ந்திருந்து ஜெபிப்பதற்குப் பதிலாக அரசியல் முறைகளைப் பின்பற்றுவதாலும் மனித ஆளுகையும் அதிகாரமும் தலைதூக்குவதாலும் ஆவியானவர் புறக்கணிக்கப் படுவதே என்பதை நாம் அறிவோமானால் நலமாயிருக்கும்.

5. கிறிஸ்துவின் சபை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் கூட்டம்

ஆதிச்சபையில் அப்போஸ்தலர் மட்டும் பிரசங்கிக்கவில்லை, ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு மிஷனெறியாயிருந்தான். கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவினதால் (2 கொரி.5:14) அவர்கள் காவலில் வைக்கப்பட்டபோதும் பிரசங்கித்தார்கள் (4:18-31) சிதறடிக்கப் பட்டபோதும் பிரசங்கித்தார்கள் (8:4) கல்லெறியப்பட்டபோதும் பிரசங்கித் தார்கள் (14:19-21) அடித்துக் காயப் படுத்தித் தொழுமரத்தில் மாட்டிய போதும் பிரசங்கித்தார்கள் 16:23-34.

அவர்கள் சொந்த ஜனத்துக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (2:14) தீண்டாதவர்களும் ஜென்ம சத்துருக்களுமாய் எண்ணப்பட்டவர்களுக்கும் பிரசங்கித்தார்கள் 8:5. போலீஸ் அதிகாரிகளுக்கும், (8:35) ஜனாதிபதிகளுக்கும், (24:24) ராஜாக்களுக்கும் (26:28) தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள். அவர்கள் வீட்டிலும் பிரசங்கித்தார்கள் (10:34; 16:32) வழியிலும் பிரசங்கித் தார்கள் (8:40) ஆலயத்திலும் (18:4) பாடசாலையிலும் (19:9) சந்தையிலும், (17:17) ஆற்றங்கரையிலும், (16:13) பகலிலும், நடுஇரவிலும் (20:7) பிரசங்கித் தார்கள்.

இவ்வித சேவையின் பலனாய் சபை அசாதாரண அபிவிருத்தியடைந்தது. நடபடியாகமத்தை ஆறு பாகமாய்ப் பிரிப்பதுண்டு. இப்பாகங்களுக்கிடையில் வரும் வாக்கியத்தில் சபை "பெருகிற்று" அல்லது விருத்தியடைந்தது என்னும் பதத்தைக் காணலாம் 6:7; 9:31; 12:24; 16:5; 19:20 பார்க்க. ஏறக்குறைய முப்பது ஆண்டுகளில் சுவிசேஷம் எருசலேமிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களைத் தாண்டி ரோமாபுரி வரையிலும் சென்று விட்டது. தன் ஆண்டவரின் கடைசிக் கட்டளையை (மத்.28:19,20) அசட்டை செய்யும் சபை ஒரு சபையோ? "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1 கொரி.9:16) என்று சொல்லாத கிறிஸ்தவன் ஒரு கிறிஸ்தவனா?

6. கிறிஸ்துவின் சபை துன்பம் சகிக்கும் கூட்டம்

சபையின் துன்பம் பரியாசத்தில் ஆரம்பித்தது. "இவர்கள் மதுபானத்தால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்" 2:13. கர்த்தருடைய பிள்ளையே, உன் ஆண்டவரைப் "பிசாசு பிடித்தவன்" என்று சொன்ன உலகம் (யோவா.8:52) உன்னைப் பரியாசமாவது பண்ணாவிட்டால் உன் மார்க்கத்தில் ஏதோ தவறு இருக்கிறது. அன்னாளே, ஏலி உன்னைப் பார்த்து "நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்?" என்று சொல்லாவிட்டால் (1 சாமு.1:14) உன் ஜெபம் வீண். அவர்களுடைய துன்பம் அதோடு முடிந்து விடவில்லை; தூஷிக்கப் பட்டார்கள் (13:45) பயமுறுத்தப் பட்டார்கள், (4:17,18) காவலில் வைக்கப் பட்டார்கள் (4:3; 5:18) ஸ்திரீகள் முதலாய்ச் சிறை சென்றார்கள் (8:3) அடிக்கப்பட்டார்கள், சங்கிலிகளால் கட்டப்பட்டார்கள், (21:32,33) கல்லெறியப்பட்டார்கள், (7:58; 14:19) பட்டயத்துக்கிரையானார்கள் (12:1,2)

இவ்வித துன்பங்களில் அவர்கள் சோர்ந்து பின்வாங்கிவிட்டார்களா? இல்லவே இல்லை. துன்பங்களை அவர்கள் சந்தித்த முறை அதிசயமானது. முதலாவதாக அவர்கள் தேவனை நோக்கி ஜெபித்தார்கள் 12:5. தேவ வல்லமையைப் பெற்று அஞ்சா நெஞ்சுடன் நற்செய்தியை நாடெங்கும் கூறி ஆத்துமாக்களை ஆதாயம் செய்தனர் 8:4. கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவிக்கும் பாக்கியம் கிடைத்ததை நினைத்துச் சந்தோஷமடைந்தனர் 5:41. தங்கள் ஆண்டவரைப் போல தங்களை துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்தனர் 7:60. கொடிய வேதனையின் மத்தியிலும் தேவனைத் துதித்துப் பாடினார்கள் 16:25.

இவ்வித துன்பமே சபை பரிசுத்தமடைவதற்கும் வளருவதற்கும் அனுகூலமாயிருந்தது. இக்கால லவோதிக்கேய சபைக்கும் சிறிது உபத்திரவம் உண்டாகுமானால் நலமாயிருக்குமே.

7. கிறிஸ்துவின் சபை கிறிஸ்துவின் வல்லமையை வெளிப்படுத்தும் கூட்டம்

நடபடியாகமம் "உயிர்த்தெழுந்த இயேசுவின் நடபடிகள்" என்றும் அழைக்கப்படும். "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்" என்றும் (யோவா.14:18) "உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன்" என்றும் (மத்.28:20) சொன்ன கர்த்தர் அவர்களோடேயிருந்து கிரியை செய்தார். அதைக் குறித்து மாற்கு "அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். (உயிர்த்தெழுந்த) கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தினார்" என்று அழகாய் எழுதியிருக்கிறான் மாற்.16:19,20.

அப்போஸ்தலர் செய்த அற்புதக் கிரியைகள் யாவும் இயேசுவின் நாமத்திலும் இயேசுவின் மகிமைக்காகவுமே செய்யப்பட்டன. பிறவிச் சப்பாணியிடம் "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொல்ல அவன் குதித்தெழுந்து நடந்தான் 3:6-8. எட்டு வருஷமாய்க் கட்டில் கிடையாய் கிடந்தவனைப் பார்த்து "ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்" என்றதும் "அவன் எழுந்திருந்தான்" 9:33,34. இவ்வாறாக "நடந்த சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப் படுத்தினார்கள்" 4:21.

"என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்றும், (யோவா.4:12) விசுவாசிக்கிறவர்கள் "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்..... வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றும் (மாற்.16:17,18) நமதாண்டவர் சொன்னாரே, நானும் நீயும் இப்படிச் செய்ய முடியாதானால் நமது விசுவாசத்தில் ஏதோ குழப்பம் இருக்கிறது என்பது தெளிவாகிறதல்லவா? நாம் நமது சபைகளைப் பூர்வ கிறிஸ்தவ சபையோடு எப்படி ஒப்பிடத் துணியக்கூடும்?

8. கிறிஸ்துவின் சபை நம்பிக்கையும் சந்தோஷமும் எதிர்பார்ப்புமுள்ள கூட்டம்

இவற்றைப் படிக்கும் ஒருவனுடைய உள்ளத்தில் "இயேசுவை விசுவாசிக்கிறவனும் விசுவாசியாதவனும் ஒன்றுபோலவே இன்பம் துன்பம் அனுபவித்து மரிக்கிறார்களே; மறுமையின் காரியங்களைக் கண்டுதானே அறிய வேண்டும், அப்படியானால், இயேசுவைப் பற்றிக் கொள்ளுகிறவனுக்கும் அவரைப் புறக்கணிக்கிறவனுக்கும் வித்தியாசம் என்ன?" என்னும் ஒரு கேள்வி எழும்பலாம். இக்கேள்விக்கும் இப்புத்தகம் தெளிவாய் விடையளிக்கிறது. ஒரு சம்பவத்தை மட்டும் படிப்போம்.

ஏரோது அரசன் இயேசுவின் வாழ்க்கை, உபதேசம், கிரியைகள் முதலியவற்றைக் குறித்தும், அவருடைய அப்போஸ்தலரின் நடபடிகளைக் குறித்தும் நன்றாய் அறிந்தவன். ஆனால் அவன் யூதமக்களின் பிரீதியைச் சம்பாதிக்கும் நோக்கத்தோடு யாக்கோபு அப்போஸ்தலனைப் பட்டயத்துக் கிரையாக்கினான். சில நாட்கள் கடந்தது. ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து .... பிரசங்கம் பண்ணினான். அப்பொழுது ஜனங்கள்; இது மனுஷ சத்தமல்ல, தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப் புழுத்து இறந்தான்" 12:21,22.

ஜோஸிபஸ் என்னும் யூதச் சரித்திராசிரியன் இச்சம்பவத்தைக் குறித்து இவ்வாறு எழுதியிருக்கிறான். "ஏரோது செசரியாவில் காட்சிகளையும் (shows) விளையாட்டுகளையும் (Games) ஒழுங்கு செய்தான். இரண்டாம் நாளில் அவன் வெள்ளி நூலால் நெருக்கமாய் நெய்யப்பட்ட ஆடையணிந்து அதிகாலையில் அரங்க சாலையில் வந்தமர்ந்தான். உதயசூரியனின் ஒளிபட்டு அவன் ஆடை அழகாய் ஜொலித்தபோது மக்கள் "இது ஒரு தேவன் தான்" என்றும், மற்றும் முகஸ்துதி பேசினார்கள். அரசன் அதைத் தடை செய்யாமல் அகந்தை கொண்டான். அவன் குடலில் ஒரு நோய் ஏற்பட்டு, ஐந்து நாட்களாய்த் தாங்கமுடியாத வேதனையடைந்து மரித்தான்". நித்தியத்தில் அவனுடைய பங்கு எதுவாயிருக்கும் என்பதை வாசகர் ஊகித்துக் கொள்ள வேண்டியதே.

ஆனால் ஸ்தேவானைப் பார்ப்போம். சுவிசேஷத்தை ஆவியின் வல்லமையோடு பிரசங்கித்ததற்காக அவனைக் கல்லெறிய எத்தனித்தார்கள். அவன் "வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான்". கற்கள் ஒவ்வொன்றாய் விழுந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. மரணம் நெருங்கிற்று. அவன் முழங்காற்படியிட்டு, ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்றான் 7:60. கிறிஸ்தவனின் நம்பிக்கையும் சமாதானமும் இங்கே விளங்குகிறது.

எரிநரகம் இல்லை என்கிறவன் அதைக் காண்பது நிச்சயம். வால்டயர் (Voltire) மரணப்படுக்கையில் "டாக்டர், நீர் என்னை ஆறுமாதம் உயிரோடிருக்கச் செய்வீரானால் எனக்குள்ள சகலத்தையும் உமக்குத் தருவேன்" என்றான். டாக்டர், "நீ ஆறுமணி நேரம்கூட உயிரோடிருக்கமுடியாதே" என்றதும், அவன் "அப்படியானால் நான் நரகத்துக்கே போவேன்" என்றான். ஹாப்ஸ் (Hobbs) என்னும் பிரசித்தி பெற்ற அவிசுவாசி மரணத்தருவாயில் "நான் இருளுக்குள் குதிக்கிறேன்" என்றான். மெய்க்கிறிஸ்தவனின் மரணமோ முற்றிலும் வித்தியாசமானது. வில்லர்ட் அம்மாள் சாகும்போது "மரித்து தேவனோடிருப்பது எத்தனை இன்பமானது!" என்றார்கள். டி.எல். மூடி மரணம் நெருங்கினபோது "உலகம் பின்வாங்குகிறது, பரலோகம் நெருங்குகிறது, தேவன் என்னை அழைக்கிறார், இது நான் மகிமை முடிசூடும்நாள்" என்றார்.

புகைவண்டி ஒன்று விபத்திலாயிற்று. இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்ட ஒரு அம்மாளை மீட்கமுடியாமல் பலர் தத்தளித்தனர். அந்த அம்மாளோ, அமைதியாக, "நண்பரே, என் உயிரை மீட்பதற்காக நீங்கள் உங்கள் உயிரை நஷ்டப்படுத்தாதேயுங்கள் நான் கிறிஸ்தவள், கிறிஸ்தவளாகவே மரிப்பேன், என் பரம வாசஸ்தலம் எத்தனை அழகாய்க் காணப்படுகிறது" என்று சொல்லிவிட்டு "உம்மண்டை தேவனே, நான் சேரட்டும்" என்னும் பாட்டை இனிமையாய்ப் பாடிக் கொண்டே அவரண்டை சேர்ந்தார்கள்.

சகோதரனே, சகோதரியே, உனக்கு இவ்வித நம்பிக்கை உண்டா? நீ ஆதிக் கிறிஸ்தவர்களைப் போன்ற உண்மையான கிறிஸ்தவன்தானா? உன் சபை ஆதிச் சபையைப்போன்ற உண்மையான சபைதானா?

பத்திரிகை செய்திகள்

சி.பி.ஐ உள்பட 10 அமைப்புகளுக்கு அனுமதி

அனைத்து கம்ப்யூட்டர்களும் கண்காணிக்கப்படும் மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி – டிச.22, அனைத்து கம்ப்யூட்டர்களையும் கண்காணிக்க சி.பி.ஐ உள்பட 10 அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாதிகளுக்கும் பயன்படும் கம்ப்யூட்டர்

இது கம்ப்யூட்டர் யுகம். தனிநபர்களாலும், அலுவலகங்களாலும் நிறுவனங்களாலும் கம்ப்யூட்டர்கள் பயன்படுத்தப் படுகின்றன. தகவல் பரிமாற்றத்தில், தொழில்நுட்பத்தில் கம்ப்யூட்டர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தப் படுகிறதோ, அதே அளவுக்கு நாசவேலைகளுக்கும் பக்க பலமாக உள்ளது.

இந்த நிலையில் நாட்டில் உள்ள எந்தவொரு கம்ப்யூட்டர் தரவுகளையும் (டேட்டா) குறுக்கிடவும், கண்காணிக்கவும், கண்டறியவும், வேவு பார்க்கவும் 10 மத்திய அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி மத்திய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுகுறித்த கெசட் அறிவிப்பை நேற்று முன்தினம் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ்வரும் கம்ப்யூட்டர் குற்றம், தகவல் பாதுகாப்பு பிரிவுக்காக மத்திய உள்துறை செயலாளர் ராஜீவ் காபா வெளியிட்டுள்ளார்.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To